# sns academy

an International CBSE Finger Print School
Coimbatore

## இயல் 5 – இன்பத்தமிழ்க் கல்வி

ஏடெடுத்தேன் கவி ஒன்று வரைந்திட
    என்னை எழுதென்று சொன்னது வான்
ஓடையும் தாமரைப் பூக்களும் தங்களின்
    ஓவியந் தீட்டுக என்றுரைக்கும்
காடும் கழனியும் கார்முகிலும் வந்து
    கண்ணைக் கவர்ந்திட எத்தனிக்கும்
ஆடும் மயில் நிகர் பெண்களெல்லாம் உயிர்
    அன்பினைச் சித்திரம் செய்க என்றார்

சோலைக் குளிர்தரு தென்றல் வரும்பசுந்
    தோகை மயில்வரும் அன்னம் வரும்
மாலைப் பொழுதினில் மேற்றிசையில் விழும்
    மாணிக்கப் பரிதி காட்சி தரும்
வேலைச் சுமந்திடும் வீரரின் தோள் உயர்
    வெற்பென்று சொல்லி வரைக என்னும்
கோலங்கள் யாவும் மலை மலையாய் வந்து
    கூவின என்னை – இவற்றிடையே

இன்னலிலே தமிழ் நாட்டினிலேயுள்ள
    என்தமிழ் மக்கள் துயின்றிருந்தார்
அன்னதோர் காட்சி இரக்கமுண்டாக்கியென்
    ஆவியில் வந்து கலந்ததுவே
இன்பத் தமிழ்க் கல்வி யாவரும் கற்றவர்
    என்றுரைக்கும் நிலை எய்தி விட்டால்
துன்பங்கள் நீங்கும் சுகம் வரும் நெஞ்சினில்
    தூய்மை உண்டாகிடும் வீரம் வரும் !

– பாரதிதாசன்



பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளி.

1. பாரதிதாசனின் சாகித்ய அகாடமி விருது பெற்ற நூல்

அ) பாண்டியன் பரிசு. ஆ) அழகின் சிரிப்பு
இ) பிசிராந்தையார் ஈ) குடும்பவிளக்கு

2. பின்வருவனவற்றுள் 'கதிரவனை'க் குறிக்கும் சொல்

அ) நிகர் ஆ) பரிதி இ) முகில் ஈ) கழனி

3. பின்வருவனவற்றுள் "மேகம்" என்பதைக் குறிக்கும் சொல்

அ) நிகர் ஆ) பரிதி இ) முகில் ஈ) கழனி

4. வீரர்களின் தோள்களுக்கு நிகராகப் பாரதிதாசன் கூறுவது

அ) மயில் ஆ) மேகம் இ) தாமரை ஈ) மலை

5. பசுமையான தோகைளை உடையது.

அ) தாமரை ஆ) பெண்கள் இ) மயில் ஈ) சோலை

6. பெண்களுக்கு நிகராகப் பாரதிதாசன் கூறுவது.

அ) மயில் ஆ) குயில் இ) கிளி ஈ) அன்னம்

7. பின்வருவனவற்றுள் 'மலை'யைக் குறிக்கும் சொல்

அ) வெற்பு ஆ) காடு இ) கழனி ஈ) புவி

8. 'ஏடெடுத்தேன்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) ஏடே + தேன் ஆ) ஏட்டு + எடுத்தேன்
இ) ஏடு + எடுத்தேன் ஈ) ஏ + டெடுத்தேன்

9. 'துயின்றிருந்தார்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) துயின்று + இருந்தார் ஆ) துயில் + இருந்தார்
இ) துயின்றி + இருந்தார் ஈ) துயின் + இருந்தார்

10. என்று + உரைக்கும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைப்பது.

அ) என்றுஉரைக்கும் ஆ) என்றரைக்கும்
இ) என்றிரைக்கும் ஈ) என்றுரைக்கும்

11. கழனி – பொருள் கூறுக.
அ) வெற்பு ஆ) காடு இ) வயல் ஈ) புவி

பொருத்துக.
12. கழனி - கதிரவன்
13. நிகர் - மேகம்
14. பரிதி - சமம்
15. முகில் - வயல்